## பொறுப்புத்துறப்பு:

நாங்கள் இந்த நோயாளி தகவல் சிற்றேற்றில் தற்போதைய மருத்துவ சான்றுகள் மற்றும் கருத்துகள் அடிப்படையில், முழு மற்றும் சரியான விபரங்களை வழங்க முயற்சி செய்துள்ளோம். எனினும், தகவல் மற்றும் ஆலோசனைகள் பல்வேறு ஆதாரங்களில் இருந்தும், காலப்போக்கிலும் மாறுபடலாம். உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், உங்கள் மருத்துவர் அல்லது சுகாதாரச்சேவை வழங்குநரை அணுகவும்.

HIV / STI பதிவு செய்யப்பட்ட தகவல்கள்

6295 2944

HIV / STI அவசர உதவிக்கு

1800 - 2521324 (அலுவலக நேரங்களில்)

எங்களிடம் முன்பதிவு செய்து கொள்ளவும்

முன்பதிவு மையத்தை அழைக்கவும்

6239 9648

அல்லது மின்னஞ்சல் முகவரியில் முன்பதிவு செய்ய

apptdsc@nsc.com.sg

## எங்கள் இடங்குறிப்பு




**DSC கிளினிக்**

31 Kelantan Lane #01-16 S(200031)

## பஸ் சேவைகள்

23, 64, 65, 66, 67, 130, 139, 147, 857

Bugis (EWL/DTL)

Rochor (DTL)

Lavender (EWL/DTL)

Farrer Parkr (DTL)

## எங்களுடண் சந்திப்பு முண்பதிவு செய்ய

சந்திப்பு முண்பதிவு மையத்தை அழைக்கவும்

6293 9648

அல்லது மின்னஞ்சல் மூலம்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி

apptdsc@nsc.com.sg

மேலும் மருத்துவகம் தகவல் கிடைக்க எங்கள் இணையதளம் WWW.DSC-CLINIC.SG
அல்லது எங்கள் FACEBOOK - WWW.FACEBOOK.COM/DSCSG

BA-T-1

Printed - January 2017

# ஆணுறுப்பு முனைஅழற்சி (BALANITIS)

NATIONAL
SKIN
CENTRE

DSC Clinic

## ஆணுறுப்பு முனைஅழற்சி என்றால் என்ன?

ஆண்குறியின் முனைப்பகுதியில் ஏற்படும் தோல் அழற்சி ஆகும். இது சில நேரங்களில் அதனைச்சுற்றியுள்ள தோல் பகுதியிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

## நோயின் அறிகுறிகள் என்ன?

பின்வரும் அறிகுறிகள் தோன்றும்:

- ஆண்குறியில் அரிப்பு மற்றும் அதனைச்சுற்றியுள்ள நுனித்தோல் பகுதி சிவப்பாதல்.
- ஆண்குறி சிவத்தல் மற்றும் வலி ஏற்படுதல்
- நுனித்தோல் சுருங்கும் போது வலி மற்றும் கடினமாக இருத்தல்
- சிறுநீர் கழிக்கும் போது வலி ஏற்படுதல்
- அரிப்பு
- ஆண்குறியில் துர்நாற்றம்
- புண் (அரிதாக)
- நிணநீர்க்கணு வீக்கம் அல்லது வயிற்றுக்கும் தொடைப்பகுதிக்கும் இடையில் வீக்கம் ஏற்படுதல்

ஆணுறுப்பு முனைஅழற்சி ஏற்பட காரணங்கள்:

| மருத்துவ / தோலின் நிலை | உயிரினங்கள் & வைரஸ்கள் | இதர காரணங்கள் |
|---|---|---|
| • நீரிழிவு<br>• சிரங்கு*<br>• மீன்செதில் நோய்**<br>• ஆணுறுப்பு முனை அழற்சி<br>• ஆண்குறியில் கேன்சர் நோய்க்கு முந்தையநிலை | • இருதிரிபுக் காளான் வகை (பூஞ்சைத் தொற்று)<br>• பிறப்புறுப்பில் அக்கி<br>• இனஉறுப்பு மரு<br>• ஓரணு ஒட்டுண்ணி வகை<br>• இதர பாக்டீரியா | • சுகாதாரமின்மை<br>• அழற்சி (எ.கா.: மசகுப்பொருள், சோப்புகள்)<br>• உடல் பருமன் ஒட்டுண்ணி வகை<br>• நீண்டகாலம் நுண்ணுயிர்க கொல்லிகள் எடுத்துக்கொள்வது லேட்டக்ஸ் ஆணுறைகளால் ஒவ்வாமை |

சிரங்கு*

சிரங்கு தோல் பகுதி மிகவும் நுண்உணர் தன்மையுடையதாக இருந்தால் ஏற்படுகிறது. இது பிறப்புறுப்பை பாதிப்படையச் செய்கிறது. மிகவும் கடினமான தன்மையுடைய சோப்புகளை பயன்படுத்துவதாலும் அடிக்கடி பிறப்புறுப்பை கழுவுவதாலும் மிகவும் மோசமடைகிறது.

மீன்செதில் நோய்**

இது ஒரு சரும நோய். இந்நோய் பொதுவாக முழங்கை, முழங்கால், முதுகு மற்றும் தலைப்பகுதிகளில் சிவப்புநிற செதில்கள் தோன்றுகின்றன. இது ஆண்குறியிலும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

## யார் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்?

தோலில் வீக்கம், வலி போன்ற அறிகுறிகள் ஏற்பட்டால் உடனடியாக பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

## ஆணுறுப்பு முனைஅழற்சி நோயை கண்டறிவது எப்படி?

- மருத்துவரிடம் கலந்தாலோசித்தல் மற்றும் பிறப்புறுப்பை ஆய்வு செய்வதன் மூலம் கண்டறியலாம்.

## ஆணுறுப்பு முனைஅழற்சி நோயை குணப்படுத்த முடியுமா?

- தோலின் மேற்பகுதியை உரசி எடுத்தல் மற்றும்/ அல்லது திசுச்சோதனை ( திசுப்பகுதியை ஆராய்தல்) செய்வதன் மூலம் இந்நோய்க்கான காரணத்தை கண்டறிய முடியும்.

இந்நோய் ஏற்பட்ட காரணங்களையும் மருத்துவ நிலைகளையும் பொறுத்து இதற்கான சிகிச்சை அமையும்.

| காரணங்கள் | சிகிச்சை |
|---|---|
| ஈஸ்ட் தொற்று | பூஞ்சை எதிர் உயிரி கிரீம்கள் |
| அக்கிகள் | வைரஸ் எதிர் உயிரிகள் |
| HPV தொற்று | நோயின் நிலையைப் பொறுத்து சிகிச்சை அளிக்கப்படும் |
| தோல் அழற்சி | அழற்சியை கட்டுப்படுத்தும் கிரீம்கள் ( மிகவும் கடின தன்மையுடைய சோப்புகளை பயன்படுத்துவதையும் அடிக்கடி பிறப்புறுப்பை கழுவுவதையும் தவிர்க்க வேண்டும்) |
| இதர தோல் மாறுபாடு | நோயின் நிலையைப் பொறுத்து சிகிச்சை அளிக்கப்படும் |

## முக்கிய குறிப்புகள்

நோய் ஏற்படும் காரணத்தைப் பொறுத்து அதை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபடலாம்.

- எடுக்கவேண்டிய தகுந்த நடவடிக்கைகள்:
- நீரிழிவை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல்
- தேவையற்ற எதிர் உயிரி மருந்துகளை நீண்ட காலம் எடுப்பதை தவிர்க்க வேண்டும்
- கடினமான சோப்புகளை தவிர்க்க வேண்டும்
- பிறப்புறுப்பை கழுவுவதையும் தேய்ப்பதையும் தவிர்க்க வேண்டும்
- விருத்தசேதனம் செய்து கொள்ளுதல் ( மீண்டும் மீண்டும் தோன்றக்கூடிய ஆணுறுப்பு முனைஅழற்சிக்கு)கொள்ளுவதற்கு முன்பே இந்த ஊசியை எடுத்துக்கொள்வது நல்லது.